

# கல்வி

# ஆடை வடிவமைப்புதுறை படிப்பிலும் சாதிக்கும் சோனா கல்விக்குழுமம்

சேலம் சோனா கல்விக் குழுமம் தொடர்ச்சியாக நான்கு தலைமுறையாக 60 வருடங்களுக்கு மேலாக கல்வித்துறையில் திறன்பட செயல்பட்டு வருகிறது. நாட்டின் மத்திய தரவரிசை 2016 ம் ஆண்டு பட்டியலில் தனியார் சுய நிலைக் கல்லூரி வரிசையில் 5ம் இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளது.

சுமார் 30க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மையங்களைக் கொண்ட கல்லூரி என்ற பெருமை பெற்றுள்ளது. தொடர்ந்து பல வருடங்களாக அனைத்து துறையிலும் சிறந்த வேலைவாய்ப்பினை பெற்றுக் கொடுத்து மாணவர்கள் வாழ்வில் வெற்றிப்படிகளை உருவாக்குவதோடு, நாட்டின் தலைசிறந்த விஞ்ஞானிகளையும், தொழில் அதிபர்களை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது.



சொக்கலிங்கம் செட்டியார்



வள்ளியப்பா



சொக்கு வள்ளியப்பா



தியாகு வள்ளியப்பா

சோனா கல்லூரி வெற்றியிலும் மேலும் ஒரு மைல் கல் தான் ஆடை வடிவமைப்புதுறையின் சாதனை. உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் 'ஆடை' அத்தியாவசிய தேவைகளில் ஒன்று 'ஆள் பாதி ஆடை பாதி' என்கிற பழமொழி எக்காலத்திற்கும் பொருந்தும். ஆடை வடிவமைப்புத் துறையில் ஏராளமான வாய்ப்புக்கள் கொட்டிக்கிடப்பதற்கு காரணம், பெருகிவரும் மக்கள் தொகையும் வளர்ந்து வரும் இந்திய பொருளாதாரச் சூழலுமே ஆகும். உத்திரவாதமான வேலை வாய்ப்புக்கள் கிடைப்பதால், இன்றைய இளைஞர்கள் பெறுமளவில் ஆடைவடிவமைப்பு படிப்புகளை எடுத்துப் படிக்கத் தொடங்கியிருப்பது நாம் கவனிக்க வேண்டிய விசயம்.

"ஐ.டி. மற்றும் மற்ற பொறியியல் படிப்புகளைப் போல் அல்லாது, எண்ணிக்கை அளவில், பி.டெக் (ஆடைவடிவமைப்பு) படிப்பவர்கள் குறைவாக இருப்பதால், பெரிய அளவில் போட்டியின்றி, நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்று, வேலைவாய்ப்பை எளிதாகப் பெற முடிகின்றது. மக்கள்தொகையில் பெருமளவு இளைஞர்களைக் கொண்டுள்ள இந்தியா, ஆடை வடிவமைப்புத் துறையில் சர்வதேச அளவில் சிறந்து விளங்குவது, இளைஞர்களின் இத்துறை மேல் உள்ள ஆர்வத்தினாலேயே எங்கின்றனர், வல்லுனர்கள். "மாணவிகள் மட்டுமின்றி, மாணவர்களும் இத்துறையை பெருமளவு தேர்வுசெய்கின்றனர். இந்திய அளவில் நடைபெற்ற போட்டிகளில் சோனா மாணவர்கள் பல்வேறு விருதுகளைப் பெற்றிருப்பதே }இதற்கான சான்று" என்கிறார் சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் இயக்குனர் ஜெயப்பிரகாஷ் .